REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

# நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 5உ திங்கள் (21—10—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 6உ செவ்வாய் (22—10—57) [இதழ் 110

## 30-ல் 25 இடங்களை காங்கிரஸ் இழந்துவிட்டது!

★

இலட்சுமணபுரி, அக். 21—

மாநில ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் காங்கிரஸ் பல தோல்விகளை அடைந்துள்ளது. வெளியாகியுள்ள 30 முடிவுகளில் 25 இடங்களில் காங்கிரஸ் தோல்வியடைந்துள்ளது!

# வளர்ச்சித் துறையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள்

## 'ஒற்றுமைக்கு வழிகோல முடியாது!

### உதட்டளவு அனுதாபம் போதுமானதல்ல!

### சி. டி. தேஷ்முக் கருத்துரை

அண்ணாமலைநகர், அக். 19—

வட்நாடு வளரவும், தென்னாடு தேயவுமான நிலைமை நீடிப்பது எவ்வளவு அபாயகரமானது என்பதை பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் சி. டி. தேஷ்முக், பிரதேசங்களின் வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகள்பற்றி எச்சரிக்கை தந்து விளக்கியிருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக பட்டமளிப்புவிழாச் சொற்பொழிவாற்றுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"துவக்கத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள பிரதேசம், நாட்டின் வளமான பகுதிகளுள் ஒன்று அல்ல என்பதைக் குறிப்பிட்டேன்.

"இதைத் தொடர்ந்து, பொதுவாக, உலகில் பிரதேசங்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை, அவற்றைக் குறைப்பதற்கான வழிகள் பற்றிய எனது சிந்தனையையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"ஒரு 'சர்வதேசப் பொருளாதாரம்' என்ற தனது புத்தகத்தில் மிர்தால் என்பார், 'இன்றைய உலகம், ஏற்றத் தாழ்வுகளை மிகுவிக்கும் போக்கிலேயே சென்றுகொண்டிருக்கிறது' என்பதை நிரூபித்திருக்கிறார். பல தலைமுறைகளாக பணக்கார நாடுகள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன; ஏழை நாடுகள் அப்படியே இருக்கின்றன. அதே நேரத்தில் பணக்கார நாடுகள், உலக மக்கள் தொகையில் மிகக் குறைந்த பகுதியையே பெற்றிருக்கின்றன; எவ்வாறெனில், மனித சமூகம் முழுவதையும் எடுத்துக்கொண்டால், சமூக அநீதிகள், ஏற்றத் தாழ்வுகள் இவற்றைத் துடைக்கும் முயற்சியில் முன்னேற்றமே இருக்கவில்லை.

"மிர்தால் தரும் கணக்குப்படி, உண்மையான நபர் விகித வருமானமும் அதன் அடிப்படையில் சராசரி மனிதனின் வாழ்க்கைத் தரமும், 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட அல்லது 1,900-த்திற்கு முன்பிருந்ததைவிட மிகக் குறைவான தாகும்.

"அதன் உண்மையான பொருளில், ஒரு உலக சர்க்கார் வேண்டும் என்ற எண்ணத்திற்கு, இதுபோன்று ஏற்றத் தாழ்வுகள் வளரும் நிலை, இடமே தரமுடியாது என்பதை மிர்தால் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"பல நாடுகளிடையேயும் ஏற்றத் தாழ்வுகள் இருந்தால் எப்படி ஒற்றுமைக்கு வழி ஏற்பட முடியாதோ, அப்படித்தான், ஒரு நாட்டிலேயே பிரதேசங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் இருப்பதும் ஒற்றுமைக்கு வழிசெய்யாது. பல நாடுகளும் ஒன்றுபடத் தேவையான கூட்டு முயற்சியைவிட, ஒரே நாட்டில் வளர்ச்சிக் கட்டத்தில் பல பிரதேசங்களின் கூட்டு முயற்சியும் வேண்டும்.

"இந்தியாவில் சர்க்கார்கள், 'சமூக—பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதே வேலை' எனக் கூறுகின்றனர்.

"ஆனால், பிரதேசங்களிடையே ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கப் போதுமான அளவு முயற்சிக்கப் பட்டேவே இல்லை; அவ்வப்போது உதட்டளவு அனுதாபம் மட்டுமே இந்தப் பிரச்சினைக்குக் காட்டப் பட்டிருக்கிறது.

"இந்தியாவின் பல பிரதேசங்களிடையேயும் நிலவும் வளர்ச்சித்துறை ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட்டாலன்றி, எவ்வளவுதான் உபதேசங்கள் புரிந்தாலும், இந்தியாவில் உணர்வுபூர்வமான ஒற்றுமை உருவாக முடியாது."

## பரம்பிக்குளம் நீர்விசை

### மின்சார உற்பத்தித் திட்டம்

காமராசர் அறிவிப்பு

சென்னை, அக். 21—

'பரம்பிக்குளம் நீர்விசை-மின்சார உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கேரள அரசாங்கம் சம்மதிக்கும்' என்று சென்னை முதலமைச்சர் காமராசர் தெரிவித்துள்ளார்.

கேரள அமைச்சர்களுடன் கலந்து பேசிவிட்டு, சென்னை திரும்பியதும் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கு சென்னை மாநிலம் ரூ. 10 கோடி செலவிடும் என்று தெரியவருகிறது.

அணைகட்ட முடிவு செய்யப் பட்டுள்ள இடம் மட்டுமே கேரள மாநிலத்தில் உள்ளது என்றும், ஆனால் தேக்கப்படும் தண்ணீர் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்றும் அவர் விளக்கம் தந்துள்ளார். அதே அணையை, கேரளம் அனுமதிக்க மறுத்தால் சென்னை மாநிலப் பகுதியில் கட்ட முடியும் என்றும், எந்தக் காரணத்தைக் காட்டியும் கேரளம் பாதிக்கப்படும் என்று கூறுவதற்கில்லை என்றும் அவர் விளக்கம் தந்துள்ளார்.

★

## சென்னை - கேரள அமைச்சர்கள் மாநாடு

ஆற்றுநீர் பற்றி முடிவுகள்

பரம்பிக்குளம், சோலையாறு தண்ணீரைப் பகிர்ந்துகொள்வது பற்றி சென்னை மாநில அமைச்சர்களும், கேரள மாநில அமைச்சர்களும் இங்கு கலந்து பேசினர்; இதைப் பற்றி முடிவு செய்ய இரு மாநிலங்களின் பொறியியல் நிபுணர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளனர்.

மொத்தம் கிடைக்கும் தண்ணீரை மதிப்பிட்டு, மாநிலங்களின் நியாயமான தேவையை அறிந்து உபயோகம் பற்றி முடிவு செய்வார்கள்.

பொறியியல் நிபுணர்களின் அறிக்கை விரைவில் கிடைக்கும் என்றும், இன்னும் ஒரு மாத காலத்தில் மீண்டும் கூடுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

ஹங்கேரிக்கு இப்பொழுது ஒரு புதிய காலண்டர் இருப்பதாகக் கூறப்படுகிறதாம்! இந்த காலண்டரின்படி, ஆண்டிற்கு 11 மாதந் தான்! புரட்சி மாதமான அக்டோபருக்குச் சீட்டு கிழிக்கப்பட்டு விட்டதாம்!

## காங்கிரஸ் ஆட்சியில் ஒரிசாவில் வறட்சி!

கட்டாக், அக். 21—

ஒரிசாவில் கடுமையான வறட்சி—இத்துடன் மூன்றாம்முறை! கடந்த இரண்டுமுறைகளையும்விட மிகவும் இப்போது கடுமையான வறட்சி!

2 இலட்சம் டன் தானியம் வழக்கமாகத் தரப்பட்டது; இந்த ஆண்டு தரமுடியாத நிலை! 82 இலட்சம் ஏக்கர் நிலத்தில் மழை பெய்யுமா என்று பயிர்கள் ஏங்கித் தவிக்கின்றனவாம்—மழை வந்தபாடில்லையாம்!

## தமிழ்நாட்டுத் திட்டம் மேலும் வெட்டப்படும்?

### எதிர்பார்த்த வருவாய்கள் கிடைக்கவில்லையாம்!

புதுடில்லி, அக். 20—

சென்னை மாநிலத்தின் 1957—58-ம் ஆண்டிற்கான திட்டத்திற்கு நிதி வழிகள் மிகவும் சுருங்கிவிட்டதாகவும், எதிர்பார்த்ததைவிட ரூ. 2 கோடிவரை குறைவாகவே கிடைக்கும் எனத் தோன்றுவதாகவும் தகவல் தரப்படுகிறது.

இந்தப் பற்றுக்குறைக்குக் காரணம், உத்தேசித்திருந்தபடி மாநில சர்க்கார், வெளிமார்க்கெட்டில் கடன் வாங்கும் திட்டத்தை மேற்கொள்ளாமல் கைவிட்டதுதான் என்றும், நம்பியபடி சிறு சேமிப்புத் திட்டம் வெற்றிபெறவில்லை என்றும், எதிர்பார்த்தபடி புதிய வரி விதிப்புகள் மூலம் தொகை வசூலாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதன் காரணமாகத் தங்கள் பற்றுக்குறை நிலையை வழக்கம் போல டில்லியிடம் மாநில அரசு முறையிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## காக்சார் தலைவர் கைது

லாகூர், அக். 21—

காஷ்மீரை விடுதலை செய்வதற்காக 10 இலட்சம் தொண்டர்களுடன் இந்தியாவுக்குப் புறப்பட முடிவு செய்திருந்த காக்சார் தலைவர் அல்லாமா மஷ்ரூகி, இன்று லாகூரில் கைது செய்யப்பட்டதாக செய்தி ஒன்று கூறுகிறது.

## ரூ. 5 கோடி நஷ்ட ஈடு!

கொழும்பு, அக். 19—

இலங்கையில் தனி நிறுவனங்கள் நடத்திவரும் 3,000 பஸ்களை இலங்கை அரசாங்கம் ஏற்க முடிவு செய்துள்ளது. ரூ. 5 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டியுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தித் திணிப்புக்கு வங்காளிகள் கடும் எதிர்ப்பு

### சட்ட, நீதிமன்ற நடவடிக்கைகள் தாய்மொழியிலிருக்க வற்புறுத்தல்

எல்லா மாநிலங்களிலும் உயர்தரக் கல்வி போதனையும், நீதிமன்ற நடவடிக்கைகளும் இந்தி மொழியில் நடத்தப்பட வேண்டும் என்று மொழிக் கமிஷன் செய்துள்ள சிபாரிசுக்கு வங்காளிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிபாரிசை ரத்து செய்துவிட வேண்டுமென்று அவர்கள் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அகில-இந்திய வங்காள மொழிப் பிரச்சார நிறுவனமான 'நிக்கில் பாரத் பங்கபாஷா புரோசார் சமிதி' நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

"மொழிக் கமிஷனின் இத்தகைய சிபாரிசைத் திணிக்க முயன்றால், வட்டார மொழி கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நாளடைவில் இப்பொழுதுள்ள தரத்தையும் இழந்துவிடும் என்பதுடன், வட்டார மக்கள் தற்குறிகளாக மாறும் நிலையும் ஏற்பட நேரிடும்.

மேலும், இந்த மாநிலத்தில் உயர்நிலைக் கல்வி போதனையும், மற்றும் சட்டசபை, நீதிமன்ற நடவடிக்கைகளையும் வங்க மொழியிலேயே நடத்துமாறு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று மாநில அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றையும் மேற்படி சமிதியினர் நிறைவேற்றியுள்ளனர்.

## கேரள கல்விச் சட்டம்

### மக்கள் தலைவருக்கு விளக்கம் தரப்பட வேண்டுமாம்!

புதுடில்லி, அக். 20—

கேரள மாநிலத்தில் வாழும் சிறுபான்மையினர் சொந்தமாகப் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்குத் தடைவிதித்து, கேரள சர்க்கார் சட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளதல்லவா? இந்தக் கல்விச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள இந்திய குடியரசுத் தலைவர் பிரசாத் தயக்கம் கொண்டுள்ளார்.

'இந்தச் சட்டம் மக்களின் வாழ்க்கை உரிமைகளைப் பாதிப்பதாக இருக்கக்கூடும்' என்று அவர், தன் சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

'இந்தச் சட்டம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது' என்று கேரளத்திலிருந்து சென்ற ஒருசிலர் முறையிட்டுள்ளனராம்!

அதன் பிறகு, கேரள மாநில அரசாங்கம், இது குறித்து விளக்கம் தரவேண்டும்' என்று அவர் கேட்டுள்ளார்.

அதன் பிறகே, சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் அனுமதி பற்றி முடிவு செய்யப்படுமாம்.

## நிறவெறியின் அட்டூழியம்!

### 11,500 வெள்ளையரல்லாதார் நீக்கப்படுவராம்!

ஜோகன்ஸ்பர்க், அக். 19—

இங்கு தற்போது மொத்தம் 11,500 வெள்ளையரல்லாதார் ஆலைகளில் வேலை செய்துவருகின்றனர்.

சென்ற ஆண்டு நிறைவேற்றப் பட்ட தொழில் இனப்பாகுபாடுச் சட்டத்தின்கீழ் தொழில் நீதிமன்றம், வெள்ளையருக்குச் சாதகமாக சமீபத்தில் தீர்ப்பளித்துள்ளதால், கருப்பருக்குப் பதிலாக வெள்ளையர்களை வேலைக்கு அமர்த்தும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றனவாம்.

நம் நாடு

சென்னை 21—10—'57 திங்கள்

# அமைச்சரவை பதில் என்ன?

இந்தித் திணிப்பிற்கு எதிராகத் தென்னாட்டில் நாளும், உருவிலும் வலுவிலும் வளர்ந்துவரும் கண்டனங்களுக்கு டில்லி தனது வழக்கமான அலட்சியத்தையே பதிலாகத் தர முற்படுவதானது, கண்டனங்களை எழுப்பியோர் — அவர்கள் வெறும் உணர்ச்சிவயப்பட்டின்றி உண்மையான பலன் கருதியே கண்டனங்களை எழுப்பியிருப்பதால் — தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கும்முறைகளுக்குத் தீவிரமானதோர் மாற்றம் தரவேண்டியிருப்பதையே வலியுறுத்துவதாக அமைகிறது.

டெல்லியின் அலட்சியம், மொழிக் கல்வி போதனை பற்றிய சுற்றறிக்கை ஒன்றில் பிரதிபலிப்பதைக் காண முடியும்.

இந்தியாவிலேயே, சென்னை மாநிலத்தில்தான் உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, மத்திய சர்க்கார், புதிய மொழிக் கல்விக் கொள்கை என்ற பெயரில் உயர்நிலைப் பள்ளிகளில் உடனடியாக இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென மாநில சர்க்காருக்கு வேண்டுகோள் ஒன்று விட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இது எழுதப்படுகிற வரையில், சென்னை சர்க்கார் அந்தச் செய்தியை மறுத்துரைக்கவில்லை என்பதால், அதனை வதந்தி என ஒதுக்கிவிடுவதற்கு இல்லை.

எனவே, இதுபற்றி இருசாராரின்—அதாவது, சென்னை சர்க்காருடையவும் இந்தி எதிர்ப்பாளருடையவும்—நிலை தெளிவாக்கப்பட்டாக வேண்டும்.

இதுகாறும் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கத் தேவை இல்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்துவரும் சென்னை மாநில சர்க்கார், இப்போது சொல்லப்போவது என்ன?

தங்களது இப்போதையக் கொள்கையின் அடிப்படையையும், முக்கியத்துவத்தையும் பற்றி மாநிலக் கல்வி மந்திரி ஏற்கனவே தந்த விளக்கத்தில் தாங்கள் திருப்தியடையவில்லை என்பதைத்தான், இப்புதிய வேண்டுகோள் மூலம் தெரிவித்திருக்கிறது, டெல்லி சர்க்கார்!

எனவே, இந்த நிலையில் தங்கள் கொள்கைதான் அறிவுடையது என்பதை, இந்த மாநிலக் காங்கிரஸ் ஆட்சியினர் சந்தேகத்திற்கு இடமின்றி உணருபவர்களானால், டெல்லி சர்க்காரின் 'கட்டாயமாக்கவேண்டும்' என்ற புதிய முயற்சிக்குத் தாங்கள் தரப்போகிற பதில் என்ன என்பதைத் தமிழ் மக்களுக்குத் திட்டவட்டமாக—அதிலும் தெளிவாகக் கூறிவிட வேண்டும்.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்த மாநிலத்திற்கு வாய்த்த எந்தக் காங்கிரஸ் அமைச்சரவையும், நாட்டு மக்களின் நலன்களைப் பிரதானமாகமதித்ததில்லை; தங்களது பதவியின் ஆயுட்காலம்பற்றிச் செலுத்திய சிந்தனையின் அளவுகூட, மக்களது நிகழ்கால — எதிர்கால வாழ்வின்பால் செலுத்தியதில்லை.

மக்களின் நலனுக்காக இல்லாவிட்டாலும், தங்களது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்கேனும், டெல்லி தேவதைகள் தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் பெரிய அநீதிகளுக்கு எதிராகப் புருவத்தை உயர்த்தக் கூடத் துணிவு பெற்றில்லாதவர்களாகவே காங்கிரஸ் அமைச்சரவைகள் இருந்து வந்திருக்கின்றன.

விளைவு...? தமிழ் மக்கள் நிகழ்காலத்திலும் தங்களது வாழ்வையும், வளத்தையும் வடநாட்டவருக்குப் பறிகொடுத்துவருவதுடன், எதிர்காலத்திலும் நம்பிக்கைக்கொள்ள முடியாத நிலை வேகமாக உரம்பெற்று வருகிறது. இதுமட்டுமல்ல! தென்னாட்டு மக்களைப்பற்றி ஒரு மட்டமான கருத்துகொள்ளும் ஆணவமும், திராவிடரின் மாண்பிமான உணர்ச்சிகளைத் துச்சமென மதிக்கும் நெஞ்சழுத்தமும் வடவரிடம் வளருவதற்கு, இந்த மாநிலக் காங்கிரஸ் அமைச்சரவைகள் வெளிக்காட்டி வந்திருக்கும் தாழ்வு மனப்பான்மை, மிதமிஞ்சிய அடிமைப்புத்தி, வைரம் பாய்ந்துபோன ஆண்டை பக்தி, இவை எல்லாம் கணிசமான அளவு துணை நின்றிருக்கின்றன என்பதிலும் சந்தேகம் இல்லை.

கடந்த காலத்தில் இந்த நாட்டு மக்கள், தங்களின் நலன்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கும், உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்கும் காங்கிரஸ் அமைச்சரவைகளிடம் வைத்த நம்பிக்கை, கடலில் செந்தாமரை மலருவதை எதிர்பார்த்த கதையாகத்தான் முடிந்திருக்கின்றது.

எனவே, அறிவுடையது—நியாயமானது எனப்படும் ஒரு கொள்கைவழி நடக்க, தங்களுக்குள்ள உரிமையை 'ஏக இந்தியா'வின் பெயரால் டெல்லி எசமானர்களின்முன் இந்த மாநில சர்க்கார் இம்முறையும் பலியிட்டு விடுவார்களேயானால், தமிழ் மக்களுக்கு இதுவரை அவர்கள் இழைத்துள்ள துரோகம் பூர்த்தியாகிவிடும்! அத்துடன், தமிழ் மக்களின் நலன்களுக்குத் தாங்கள்தான் சட்டரீதியான பொறுப்பாளிகள் என்று கோருவதற்குள்ள அருகதையைக்கூட அவர்கள் இழந்துவிட நேரிடும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

உரிமை முழக்கமா, துரோகச் செயலா? சென்னை அமைச்சரவை தரவிருக்கும் பதில் என்ன?

## கல்வி பற்றி பாவே!

பெங்களூர், அக். 19—"அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் கல்வித்துறை இருக்கக் கூடாது; ஒரு குறிப்பிட்ட வடிவத்திலுள்ள கல்வியைப் பயிலுபவர்கள், சுதந்தரமாகச் சிந்திக்கக்கூடிய சக்தியற்றவர்களாக விளங்குகிறார்கள்" என்று, ஆச்சாரியா வினோபா பாவே, மாணவர்களிடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

# 'வடநாட்டுச் சவாலுக்குப் பதில் தருவோம்; விடுதலைப் போராட்ட அத்தியாயத்தைத் துவக்குவோம்'

## 'இலக்கியப் பெருங்கடலைக் கொண்ட எங்கள் மொழியிருக்க, எதுவுமேயில்லாத இந்தி எதற்கு?'

## 'நமது காலத்திலே நாம் 'கோட்டை' விட்டோம் என்ற பழிவேண்டாம்'

### 'தமிழர்கள் ஒன்றுபட்டால் வெற்றி நிச்சயம்'

### வடநாட்டு ஆதிக்கவெறிக்கு சம்பத் எச்சரிக்கை

13-10-57-ல், சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத், எம்.பி., அவர்கள் ஆற்றிய உரையின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது; (பேச்சின் முற்பகுதிகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன):—

"இன்றையத்தினம் தென்னாட்டிலே இருக்கின்ற பல நண்பர்கள் ஒப்பாரி வைக்கிறார்கள்; ஓலமிடுகிறார்கள்—'டில்லி சர்க்கார், கவிஞர்களைக் கவுரவிப்பதற்கு ஸ்டாம்பு போடுகிறது; அதிலே சூர்தாசர் இருக்கிறார்; மீராபாய் இருக்கிறாள்; இன்னொரு அம்மையார் இருக்கிறார்கள்; எல்லாம் வடநாட்டுப் புலவர்களையும், வடநாட்டுக் கவிஞர்களையும் போட்டிருக்கிறார்கள்; ஐயோ, வள்ளுவரைக் காணோமே! ஐயோ பாரதியைக்கூடக் காணோமே!'—என்று, ஒரு தலையங்கம் எழுதுவதோடு அவர்களுடைய குறை தீர்ந்துவிடுகிறது.

"பிறகு, படமெடுக்கிறான்—'1857 — 1957 சுதந்திரப் போராட்டத்தினுடைய நூற்றாண்டு விழா' என்று; படத்தை மிக ஆவலோடு நமது தென்னாட்டுத் தேசியத் திலகங்கள் நாற்காலியினுடைய ஓரத்திலே உட்கார்ந்துகொண்டு வெகு சுவையோடு பார்க்கிறார்கள்—அதிலே லாகூர் வருகிறது; லக்னோ வருகிறது; பம்பாய் வருகிறது; கல்கத்தா வருகிறது; பாட்னா வருகிறது; பகதூர்ஷா வருகிறார்; நானாசாகிப் வருகிறார்; ஜான்சி இராணி வருகிறாள்; திலகர் வருகிறார்; தாதாபாய் நௌரோஜி வருகிறார்; இன்னும் வடக்கே இருக்கின்ற அத்தனை அரசியல் தலைவர்களும், இன்னும் மோதிலால் நேரு, வல்லபாய் படேல், வித்தல்பாய் படேல், ஜவகர்லால் நேரு, உத்தமர் காந்தியார் கலந்துகொண்ட பல்வேறு மாநாடுகள், அந்த நேரத்திலே அவரைப் புடைசூழ்ந்து கொண்டிருந்த அபுல்கலாம் ஆசாதைப் போன்றவர்கள், இன்னும் அவர் பக்கத்திலிருந்த கிருபளானி போன்றவர்கள்-இப்படி, வடக்கே இருந்து செத்த தலைவர்கள், இன்னும் இருந்துகொண்டிருக்கிற தலைவர்கள், இருக்கிறாரா இல்லையா என்ற விவாதத்துக்குரிய தலைவர்கள், எல்லா வடநாட்டுத் தலைவர்களும் வரிசை வரிசையாக வருவதை அதிலே காட்டுகிறார்கள்.

"நம்முடைய தென்னாட்டுத் தேசியத் திலகங்கள்—உப்புச் சத்தியாகிரகத்திலே உதைபட்டவர்கள்—ஒத்துழையாமையிலே நொந்துபோனவர்கள்—1942 போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள் அத்தனைப் பேரும் படத்தை ஆவலோடு பார்க்கிறார்கள்; என்ன நம்பிக்கையோடு பார்க்கிறார்கள் தெரியுமா? 'ஆகா! நம்மைக் கவுரவிப்பதற்கு நல்ல 'கிளைமாக்ஸ்'—நல்ல உச்சத்தில் கொண்டுவந்து தென்னாட்டைக் காட்டப் போகிறார்கள்'—என்று! ஆவலோடு பார்க்கிறார்கள்—நல்ல கதையினுடைய உச்சம் வருகிறது—'கிளைமாக்ஸ்' வருகிறது- 'சுபம்', 'மங்களம்' என்ற பேரும் வருகிறது!

"படம் முடிந்து விட்டது; பிறகு இவர்கள், தலையிலே கையை வைத்துக்கொண்டு வருகிறார்கள்—'ஐயோ, இங்கு வடக்கு—தெற்கு என்று பேசியவர்களைப் பார்த்து, வல்லடி வம்பர்கள் என்று சொன்னோமே; பாரதத்தைப் பிளக்கின்ற பாதகர்களே என்று அர்ச்சித்தோமே! இப்போது இப்படிச் செய்துவிட்டானே பாதகன்! ரொம்ப நாளைக்கு முன்னாலே நாம் ஆரம்பித்திருக்கவேண்டிய காரியத்தையல்லவா, இன்றைக்கு முன்னேற்றக் கழகத்தினர் செய்துகொண்டிருக்கிறார்கள்?' என்ற எண்ணம் அவர்களுக்கு வருகிறது; 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்று தலையங்கம் எழுதுகிறார்கள்; 'யாருக்கு நஷ்டம்?' என்று மிரட்டிப் பார்க்கிறார்கள்; என்ன பயன்? '1857' என்று புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள்; அதில் தென்னாட்டுக்காரர்களைப் பற்றி இல்லை; வ. உ. சி. இல்லை—கட்ட பொம்மன் இல்லை—ராஜாஜி இல்லை—ஆந்திரகேசரி பிரகாசம் இல்லை! சொல்லியழுது என்ன பயன்? அவன் நம்மை மதித்தாலல்லவா, அவன் அதிலே நமக்கு இடம் தருவான்? நம்முடைய யோக்கியதை—இலட்சணம் அவர்களுக்கு விளங்குகிறது.

"ஏதோ ஒரு 4 எலும்புத் துண்டுகளைத் தூக்கிப் போடுவதைப் போல், 'நீ ராஜ்ய சபா மெம்பர்; நீ பார்லிமெண்டு மெம்பர்; அமெரிக்காவுக்கு 2 டிக்கெட்—மனைவியோடு போய்வரலாம்' என்று சொன்னால், நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு இன்றைய அரசியலிலே மந்தை மந்தையாக ஆள் கிடைக்கும் போது, அவன் எப்படி உங்களை மதிப்பான்? அவன் எப்படி இந்த நாட்டு மக்களுடைய உள்ளத்துக்கு மதிப்புக் கொடுப்பான்? உரிமை வேட்கைக்கு—உரிமைக் கோரிக்கைக்கு அவன் எப்படி இணங்கி வருவான் என்று கருதுகிறீர்கள்?"

தோழர் சம்பத் அவர்கள் இதற்குப் பிறகு பேசிய பேச்சின் விவரம் 14—10—57 இதழில் வெளிவந்துள்ளது.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது :—

"இந்த நாட்டு மக்கள், இந்த விஷயத்திலே அவ்வளவு சாதாரணமாக ஏமாந்துபோய்விடமாட்டார்கள், இந்த நாட்டு மக்கள், விழிப்படைந்து வருகிறார்கள். மற்றொன்றையும் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த ஒரு பிரச்சினையிலே—இந்திப் பிரச்சினையிலே கருத்து வேற்றுமையோடு இந்த மக்கள் தனித்து நிற்கவில்லை, ஏதாவது சொல்லி ஏமாற்றிவிடுவதற்கு! உன்னோடு வாழ்ந்தால் எங்களுக்கு உரிமையில்லை—நலன் இல்லை—உலகத்திலே எங்களுக்கு மதிப்பில்லை என்று தெரிந்து, தனிமையிலே வாழ வேண்டுமென்று நெடுங்காலமாகக் கேட்டுக் கொண்டுவருகிறோம்.

"கேட்டுக்கொண்டு வருகின்ற எங்களுடைய நிலை எவ்வளவு நியாயமானது என்று உணராதவர்களும் உணரத்தக்க வகையிலே நீ இந்தச் செயல்களைப் புரிகிறாயே தவிர, ஏதோ குறிப்பிட்ட செயலிலே கருத்து வேற்றுமை கொண்டு நாங்கள் கோபித்துக் கொண்டிருக்கிறோம்—சமாதானம் செய்துவிடலாம்—தேநீர் விருந்து அளித்துவிடலாம் என்று கருதினால், ஏமாறுவாய் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"நெடுங்காலத்துக்கு உன்னாலே கட்டிக்காக்க முடியாது; நீ அமைத்திருக்கின்ற இந்த ஆபத்தான வலையும் உன்னையே தாங்க முடியாத ஒரு வலையாகும்; ஆங்காங்கே அது பட்டுப்பட்டென்று அறுந்துகொண்டிருப்பதை நாங்கள் இங்கே பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

"அறுந்த இடத்தை மறுபடியும் நீ மூட்டுவதற்குள் இன்னொரு இடத்திலே அறுகிறது; ஆகவே, உன்னாலே நெடுநாட்களுக்குக் கட்டிக்காக்க முடியாது. இன்னும் உன்னிடத்திலே ஆசையிருந்தால், 'ஓடிப் போ' என்று சொல்வதைவிட உனக்கு வேறு உபதேசம் கிடையாது.

"நான் கேட்க விரும்புகிறேன்—தென்னாட்டிலிருக்கின்றவர்கள்தான் வகுப்பு வெறியர்கள்; வெள்ளையனுடையயாஜிக்காதலர்கள் என்று பேசிக்கொண்டிருக்கின்ற வம்பனே! உன்னை நான் கேட்கவிரும்புகிறேன்—பஞ்சாபிலே இன்றைக்கு இரணகளமாகிக்கொண்டிருக்கிறதே ஏன்? இதே இந்திப் பிரச்சினையிலே ஒருவர் மண்டையை ஒருவர் உடைத்துக்கொண்டு நிற்கிறார்களே, என்ன காரணம்? எடுத்துச் சொல்லு—விளக்கம் கூறு! அங்கிருக்கின்ற சீக்கியர்களுக்கு இந்தி தெரியாதா? இந்தி அவர்களுக்கு வராதா? ஏன் அவர்கள் எதிர்க்கிறார்கள்? 'இந்தியைக் காப்பாற்றுகிறோம்; ஜெய் இந்தி' என்று கிளர்ச்சி நடத்துகிறார்களே, அவர்களுடைய நோக்கமென்ன? ஒரு மொழியை இந்த நாட்டு மக்கள் நலனுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவா, அவர்கள் வெறித்தனத்தோடு போராடுகிறார்கள்? சீக்கியர்களுடைய புனிதக் குளத்தை அசுத்தப்படுத்துகிறார்கள்? சீக்கியர்களுடைய கோயிலிலே சென்று மனம் புண்படக்கூடிய வகையிலே நடந்துகொள்கிறார்கள்? இந்தி வெறும் மொழிப் பிரச்சினைதானா? என்று கேட்கிறேன்.

"அந்தப் போராட்டத்தினுடைய எதிரொலி தலைநகர் டெல்லிக்குக் கேட்கிறது. தலைநகரிலே பார்லிமெண்டு நடந்துகொண்டிருக்கும்போது ஊரடங்குச் சட்டம் போடக்கூடிய அளவிற்கு, அந்த வெறித்தனத்தினுடைய எதிரொலி அங்கே கேட்கிறது. டெல்லியிலே இருக்கின்ற சீக்கியர்களை இந்தி பேசுகின்றவர்கள் அடிக்கின்றார்கள்; டெல்லியிலே இருக்கின்ற சீக்கியர்கள் அவர்களைத் திருப்பித் தாக்க முன்வருகிறார்கள்; சர்க்கார் இடையிலே புகுந்து ஊரடங்குச் சட்டம் போடுகிறது. வெறும் மொழிப் பிரச்சினைக்கா இவ்வளவு பெரிய கலகங்கள் நடந்துகொண்டிருக்கின்றன?—என்று கேட்க விரும்புகின்றேன்.

"இங்கு வந்து தாலாட்டுப் பாடுகிறாயே—'இது ஒன்றும் பெரிய பிரச்சினையல்ல, சாதாரணப் பிரச்சினை; இது மைதானத்தில் பேசவேண்டிய பிரச்சினையல்ல; ஒரு அறையிலே உட்கார்ந்து விவாதிக்க வேண்டிய பிரச்சினை'—என்றெல்லாம் கூறுகிறாயே, ஏன் அங்கெல்லாம் தலைகள் உருண்டுகொண்டிருக்கின்றன? ஏன் அங்கே இரத்தம் ஆறாகப் பெருகி ஓடிக்கொண்டிருக்கிறது? விளக்கம் சொல்.

"டெல்லி மக்கள்சபையில், இந்தியை எதிர்த்து முன்னேற்றக் கழகம் பேசியதற்குப் பிறகு கழக நண்பர்களைச் சந்தித்தார்

(3-ம் பக்கம் பார்க்க)

# ஈ. வெ. கி. சம்பத் இலட்சிய முழக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள்—பல மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்—மாராட்டியத்தைச் சேர்ந்தவர்கள்—இன்னும் வங்காளத்திலிருந்து வந்த சில உறுப்பினர்கள்—சந்தித்து அவர்கள் என்ன கூறுகிறார்கள்? 'இந்தி எங்களுக்கு வரும்; எங்களிலே வெகு பேருக்கு இந்தி தெரியும்; ஆனாலும், நாங்கள் இந்தியை ஏற்றுக்கொள்வது பற்றி இப்பொழுது புனராலோசனை செய்கிறோம்; என்கிறார்கள்; முன்பு இந்தியாவினுடைய தேசிய ஐக்கியத்திற்கு இந்தியை தேசிய மொழியாக ஏற்கவேண்டுமென்று சத்தம் போட்டவர்கள்தான் நாங்கள்; ஆனால் 10 வருட கசந்த அனுபவத்திற்குப் பிறகு தெரிகிறது—'அது வெறும் மொழிப் பிரச்சினையல்ல; இந்தியாவின் தேசிய ஐக்கிய சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல; இந்தியத் துணைக்கண்டத்து ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டிருக்கின்ற, இங்கிருக்கின்ற ஒரு கூட்டத்தினுடைய சூழ்ச்சி என்பதை நாங்கள் உணருகிறோம்; இப்போது நாங்கள் மறுபடியும் யோசிக்கிறோம்'—என்று அவர்கள் கூறினார்கள்.

"இன்றையத் தினம் நாம் ஒன்றே ஒன்றிலே மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; நான் மிகமிக வருந்துகிறேன்—தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திருவாளர் இராசாராம் நாயுடு அவர்கள் ஒரு இடத்திலே பேசினார் என்று பத்திரிகையிலே பார்த்தேன்—'இந்தியைத் தமிழர்கள் கற்றுக்கொள்ளவேண்டும்; இந்தி மிகச் சுலபமான மொழி'—என்று; நண்பரே, உமக்காக நான் பல தடவை பரிதாபப்பட்டிருக்கிறேன்; ஆனால் இந்த முறை பரிதாபப்படுவது மிகமிக அதிகம் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இப்பொழுது இந்த நாட்டு மக்கள் மலைப்பது, 'இந்தியைக் கற்றுக்கொள்வது சுலபமா, கடினமா என்ற பிரச்சினையில் அல்ல; இந்தி நமக்கு ஏன்?'—என்றுதான் தமிழகம் கேட்கிறதே தவிர, 'இந்தியை நம்மால் கற்றுக்கொள்ள முடியுமா?'—என்ற பிரச்சினையிலே நாம் இன்றையத் தினம் காலத்தைச் செலவிட்டுக்கொண்டிருக்கவில்லை.

"டெல்லியில்கூட, நான் பேசி முடித்த பிறகு உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் வந்து என்னிடத்திலே பேச்சுக் கொடுத்தார்—என்ன, இந்தியே வேண்டாமென்றே சொல்லுகிறீர்களா?'—என்று பேச்சை ஆரம்பித்தார்; பிறகு கொஞ்சம் பரிவோடு, 'சம்பத்ஜீ' என்று என்னை அவர் அழைக்க ஆரம்பித்துப் பேசினார்—'இந்தியாவிலேயே மிகவும் கெட்டிக்காரர்களல்லவா, தென்னாட்டுக்காரர்கள்; அதிலும் குறிப்பாகத் தமிழர்கள், மிகவும் கெட்டிக்காரர்களாயிற்றே! உலகத்திலுள்ள அத்தனை மொழிகளையும் கூட கற்றுக்கொள்வது என்று மனம் வைத்துவிட்டால் ஒரு நொடிப்பொழுதிலேயே அவர்கள் அவற்றில் புலவர்களாகி விடுவார்களே'—என்று, நம்மை வெகு உயரத்திலே கொண்டுபோய் உட்காரவைத்தார்; பிறகு சொன்னார்—'இந்தியைப் பற்றி, நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? இந்தி மிகமிக எளிமையான மொழி; இன்றைக்கு நீங்கள் இந்தியிலே 'ஆனா,' 'ஆவன்னா' படிக்க ஆரம்பித்தால்—அரிச்சுவடியைப் படிக்கத் துவங்கினால், இன்னும் மூன்றே ஆண்டுகளிலே அதிலிருக்கின்ற இலக்கியங்கள், காவியங்கள் அனைத்தையும் படித்து முடித்துவிடலாம்; 3 ஆண்டுகளுக்குப் பிறகு படிப்பதற்கு உங்களுக்கு பத்திரிகைகள் தவிர வேறு இந்தியில் எதுவுமிருக்காது; அவ்வளவு சுலபமான மொழி; இவ்வளவு எளிதிலே நீங்கள் கற்றுக்கொள்ளமுடியும்; ஏன் மறுக்கிறீர்கள்?'—என்று, இங்கு துணி விற்கும்போது எவ்வளவு லாவகமாகப் பேசுகிறார்களோ அதைவிட லாவகமாக அவர் என்னிடத்திலே இந்தியை விலை பேசினார்.

"இந்தியில் இன்றைக்கிருக்கின்ற பெரிய இலக்கியம், பெரிய காவியம் துளசிதாசருடைய இராமாயணம்; நான் அவருக்குச் சொன்னேன்—'இதுதான் உங்களுடைய பெரிய காவிய—தனிப்பெருங்கலை என்று இருப்பது; ஆனால் நான் பிறந்து வளர்ந்த நாட்டினுடைய மொழியிருக்கிறதே, அந்த மொழியினுடைய இலக்கியச் செல்வம், ஒரு பெருங்கடல்; 'தமிழிலேயுள்ள எல்லா இலக்கியங்களும் உனக்குத் தெரியுமா?' என்று ஒரு தமிழ் நாட்டுப் புலவனைக் கேட்டால், அவன் எவ்வளவு திமிர்பிடித்தவனாக இருந்தாலும், 'தெரியும்' என்று தைரியமாகச் சொல்லமாட்டான்; எவருக்குமே தெரியாது. ஒருவன் இராமாயணத்தைப் படிக்க ஆரம்பித்தால், அவன் அதிலேயே புகுந்துகொள்வான். பிறகு அவனை வெளியே கொண்டுவருவது என்பது வெகு கஷ்டம்; சிலப்பதிகாரத்துக்குள் புகுந்தால் ஆயுள் பூராவும் அவன், 'சிலப்பதிகாரம் சின்னக்கண்ணு' என்று பெயர் வைத்துக்கொள்வானே தவிர, வேறு எதிலும் அவன் கவனம் செலுத்த முடியாது; திருக்குறளிலே புகுந்தால் அப்படித்தான்; ஒருவர் சங்க இலக்கியங்களை மட்டுமே சிறப்பாகக் கருதி, அதிலே இருக்கும் அழகுகளையும் அணிகளையும் ஆயுள் பூராவும் ஆராய்ந்து, 'ஐயோ, இன்னும் பல காண்பதற்கு வயதில்லையே' என்று வருந்திச் சாவார்; இப்படி அங்கிருக்கின்ற இலக்கியத்தில் உள்ள ஒவ்வொரு பகுதியும், ஒருவருடைய ஆயுளையே கேட்கும்—தன்னுடைய அழகைத் தெரிவிப்பதற்கு! அப்படிப்பட்ட இலக்கியச் செறிவுபடைத்த மொழியைச் சேர்ந்த நான், மூன்றே வருடங்கள்—அதற்கப்புறம் கற்பதற்கு ஒன்றுமே இல்லை என்ற மொழியை—ஒன்றுமில்லாத மொழி என்று தெரிந்துகொள்வதற்காகவா நான், என்னுடைய 3 வருடங்களை வீணாக்குவது?'—என்று அவரிடத்திலே கேட்டேன்.

"ஏன் நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தமிழ் நாட்டிலிருக்கின்ற சில அரசியல் சழக்கர்கள், 'இந்தி மிக எளிது; கற்றுக்கொள்வோம் தமிழர்களே' என்று பாட்டுப் பாட ஆரம்பித்திருக்கிறார்கள்; 'எளிதாயிருந்தால், எதையுமே நாம் ஏற்றுக்கொள்வதா?'—என்று கேட்க விருமபுகிறேன்.

"இந்த நாட்டில் ஒவ்வொரு காரியத்தையும், நியாய அநியாயத்தையும், நம்முடைய மானமரியாதையையும் பார்த்துத்தான் ஏற்றுக்கொள்கிறோமே தவிர, மிக எளிது என்பதினாலே எல்லோரும் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால், இந்த நாடு என்ன ஆவது என்று நான் கேட்க விரும்புகிறேன். 'அது ஏன்?'—என்ற கேள்விக்கு விடையில்லை; அப்படி என்ன—அது இல்லாததனாலே இன்றைக்கு உலகத்திலே நாம் கடை கெட்டவர்களாய்ப் போய்விட்டோம்?

"வி. கே. கே. மேனன் காஷ்மீர் பிரச்சினையைப்பற்றி கர்ஜனை செய்வதானாலும் ஆங்கிலத்திலேதான் செய்கிறார்; டி. டி கிருஷ்ணமாச்சாரியார் 'பகவதி பிட்சாந் தேஹி' என்று உலகத்திலே 'பிச்சை' எடுப்பதானால் ஆங்கிலத்திலேதான் கேட்கிறார்; பண்டித நேரு ஜப்பானிலே இருக்கின்ற யானையைப்பற்றி விசாரிப்பதானாலும் ஆங்கிலத்திலேதான் விசாரிக்கிறார்; இப்படி நீ உலகத்திலே உலவி வருவதற்கும், உலகத்து மக்களிடத்திலே அரசியல் 'பழமை' பேசுவதற்கும், உலகத்து மக்கள் மத்தியிலே சென்று, 'எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது, அரசியலிலே; இந்தியா இப்பொழுது ரொம்பவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறது; படைபலத்தைப் பெருக்கிக்கொண்டு திட்டங்களைப் போடமுடியாமல் தவிக்கிறோம்; ஏதோ உங்களால் ஆனதைக் கொடுங்கள்!'—என்று கேட்பதற்கும் உனக்கு ஆங்கிலம்தான் தேவையாயிருக்கிறது.

"இந்த நிலையில், இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்து அரசியல், ஆங்கிலத்திலே வெகு சுலபமாக நடந்துகொண்டிருக்கிறது; ஆங்கிலம் கற்பதனால் இனி ஆங்கிலேயனுக்கு நம்முடைய அரசியல் உரிமையை அடகுவைக்க வேண்டுமென்ற காலமும்மலையேறிப்போய்விட்டது; உலகத்திலே ஆங்கிலம் பேசுகின்ற எத்தனையோ அரசுகள் சுதந்தரமாக வாழ்ந்துகொண்டிருப்பதைக் காணுகிறோம். சுதந்தரமாக வாழ்ந்துகொண்டிருப்பதை மட்டுமல்ல—ஆங்கிலத்தினுடைய பகுதியான பிரிட்டனை இன்றைக்குத்தன்னுடைய காலடியிலே வைத்துக்கொண்டிருக்கக் கூடிய அளவிற்கு செல்வத்திலும் அதிகாரத்திலும் பெருத்திருக்கின்ற அமெரிக்காவைப் பார்க்கிறோம்; ஆங்கிலம் அங்கே வழங்குகின்றது. கனடா இன்றைக்கு விடுதலை பெற்ற நாடாகத்தான் விளங்குகின்றது; ஆங்கிலம் அங்கே வழங்குகின்றது. ஆஸ்திரேலியாவிலே வழங்குகிறது; இன்னும் ஐரோப்பாவிலே இருக்கிற பல்வேறு நாடுகளிலே ஆங்கிலம் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்படுகின்றது; ஆகவே, ஆங்கிலம் நமக்குத் துணைநிற்கிறது; ஆங்கிலம் படிப்பதினாலே புதிய அவமரியாதை ஒன்றும் வந்து விடப்போவதில்லை; இருக்கின்ற மரியாதைக்கு ஆபத்தொன்றும் வரப்போவதில்லை; இருந்தாலும், நீ 'இந்தி படி' என்கிறாய்; அதிலே இலக்கியமும் கிடையாது—உபயோகமான எதுவும் கிடையாது! ஆனாலும் நீ, 'படி' என்கிறாய்; ஏன் படிக்க வேண்டும்? எதற்காகப் படிப்பது? உன்னுடைய ஆதிக்கத்தைஏற்றுக்கொள்கிறோம் என்பதைத் தவிர, இதற்குப் பின்னாலே இருக்கின்ற தத்துவம் என்ன? இதற்குப் பின்னாலே இருக்கின்ற அரசியல் அவசரமோ, தேவையோ என்ன?—என்றுதான் நான் கேட்கப் பிரியப்படுகிறேன்.

"இன்றையத் தினம் மக்கள் சபையிலே ஏன், பண்டித நேருவோ, மற்றவர்களோ இந்தியிலே பேசுவதுதானே? மற்றவர்களைவிட்டு இந்தியிலே பேசச் சொல்லுகிறார்கள்! நேரு பேசுவதானால் ஆங்கிலத்திலேதான் பேசுகிறார்! பந்த் பேசுவதானால் ஆங்கிலத்திலேதான் பேசுகிறார்! யார், தங்களுடைய பேச்சை உலகம் கவனிக்கவேண்டுமென்று கருதுகிறார்களோ அவர்களெல்லாம் ஆங்கிலத்திலேதான் பேசுகிறார்கள! ஏன்?—தங்களுடைய பேச்சு உலகம் பூராவும் செல்லவேண்டும்! அந்தப் பேச்சின் மூலம்தான் தங்களுடைய உள்ளத்தை உருவாக்கிக்காட்ட முடிகிறது என்ற கவலையினாலே அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

"ஆனால், அது என்ன மாயம்? 1965-ல் ஆங்கிலமே இல்லாமல் அந்த இடத்திலே இந்தியைக் கொண்டுவந்துவிட வேண்டுமென்றுஒருஇடத்திலே சொல்லி, மக்களுடைய போலி கௌரவத்தைப் பயன்படுத்துவது! இன்னொரு இடத்திலே, 'ஆங்கிலத்தை புடமைவைத்துக்கொள்வோம்' என்று குழப்புவது; ஆகவே, இந்தக் குழப்பத்திற்குப் பின்னாலே நமக்கு நன்றாகத் தெரிகின்ற உருவம் ஆதிக்கவெறி! கொஞ்சம்கூட சந்தேகத்திற்கு இடமில்லாத ஆதிக்கவெறிதான் இதற்குப் பின்னாலே இருக்கிறது.

"இந்த இந்தி ஏகாதிபத்தியத்தைப் பற்றிய பேச்சு நமக்கு நன்றாகக் காதிலே விழுகிறது. இதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பது மட்டுமல்ல; கடுமையான எதிர்ப்பை—உறுதியான எதிர்ப்பை நாம் காட்டித் தீரவேண்டும்; இதிலே நமக்கு உயிர் பெரிதல்ல! 'இந்தக் காலத்திலே வாழ்ந்திருந்த தமிழர்கள் கோட்டை விட்டுவிட்டார்கள்' என்று, பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வருகின்ற மக்கள் நம் மீது பழி சுமத்தக்கூடிய நிலையிலே நாம் இந்த நேரத்தில் தவறு செய்துவிடக்கூடாது. அத்தனைப் பேருடைய சக்தியும் ஒன்று திரண்டு, அவர்களை நாம் கேட்டுத் தீரவேண்டும்.

"இதிலே நமக்கு இருக்கின்ற இன்னொரு ஒரே ஒரு வாய்ப்பை நான் சொல்லிவிட விரும்புகிறேன்—இந்தப் பிரச்சினையில் நமக்குக் கிடைக்கின்ற வெற்றி—தோல்வி நமக்கு விடுதலை இன்னும் எவ்வளவு தூரத்திலே இருக்கிறதென்பதை நிர்ணயிக்கப் போகிறது; வெறும் இந்திப் பிரச்சினைமட்டுமல்ல இந்த நேரத்திலே வந்து நிற்பது; இந்த வெறியர்கள் முழுச்சக்தியோடு இந்தியைத் திணிப்பார்கள். நாம், இந்த நேரத்தில் தமிழர்களுடைய விழிப்புணர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு விடுதலைப் போராட்டத்தினுடைய முதல்அத்தியாயத்தைத்தொடங்கினால், நிச்சயமான வெற்றி—நமக்கு நிரந்தரமான வெற்றி உண்மையிலே கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் யாரும் மந்தப் போக்கினைக் காட்டிவிடாமல், சின்னப்புத்தியை வெளிப்படுத்திக்கொண்டு இந்த நேரத்தில் குறுக்கே ஓடிக்கொண்டிருக்காமல் எல்லோரும் ஒன்றுபட்டு நின்று, நம்முடைய சக்தியை வெளிப்படுத்தி—உறுதியை வெளிக்காட்டி அவர்களுடைய இந்தி ஏகாதிபத்தினுடைய கடைசி சவாலுக்கு நாம்—தமிழர்கள் நல்ல பதிலைத் தரவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

# அக். 13: இந்தி எதிர்ப்பு நாள்

## நாடெங்கும் கண்டன முழக்கம்

### ஏற்காடு :

சேலம் மாவட்டம், ஏற்காடு தி. மு. க. சார்பில், பெரிய ஏரி அருகாமையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று, பொதுக்கூட்டத் திடலை அடைந்தது. தோழர்கள் பி. இருதயசாமி, ஈ. சு. மணி, வி. சிவப்பிரகாசம், கே. எஸ். மணி, ஏ. மாரியப்பன் ஆகியோர், தோழர் ஜே. எஸ். கே. உசேன் தலைமையில் சொற்பொழிவாற்றினர்; முடிவில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### வாலாஜாபேட்டை:

இந்தி எதிர்ப்பு ஊர்வலமும், கூட்டமும் நடைபெற்றன; தி.மு. கழகச் செயலாளர் செ. ஜெ. கோபால் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கண்டனங்கள் பொறித்த அட்டைகளையும், கொடிகளையும் ஏந்தி கண்டன முழக்கங்களுடன் நகரின் பல வீதிகளில் ஊர்வலம் வந்து பெண்கள் பாடசாலைக்கருகாமையில் முடிவுற்றது. அங்குள்ள சாமி அரங்கில் தோழர் அ. கணேசன் தலைமையில் தோழர்கள் கருத்தோவியன், மணிஎழிலன், உத்திரநாதன் ஆகியோர் பேசினர்; பின்னர், தீர்மானம் வாசிக்கப்பட்டு பொதுமக்கள் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

### கோகிலாபுரம் :

தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் கண்டனத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### மதுராந்தகம் :

பிற்பகல் 3 மணிக்கு கழகக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக இந்தி எதிர்ப்பு ஒலிகளை முழங்கிக்கொண்டு 5 மணியளவில் கழகக் கட்டிடத்தில் வந்து முடிவுற்றது. மாலை 6 மணிக்கு தாலுகா ஆபீஸ் திடலில் தோழர் டி. பார்த்தசாரதி தலைமையில், தோழர்கள் எம். எம். இராசாபாதர், ஏ. சண்முகம், பி. சிவானந்தம், எம். எல். பாலு, எம். எஸ். வெங்கடாசலம் ஆகியோர் இந்தி இக்காட்டிற்குத் தேவையற்ற மொழி என்று குறிப்பிட்டுப் பேசினர்; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வல்லம்படுகை :

மாலை 4 மணிக்கு, ஓடக்காரத் தெரு, திரு. வீ. க. படிப்பகத்திலிருந்து வீ. துரைசாமி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மு. அஞ்சபுலிய இல்லத்தில் முடிவுற்றது. மாலை 6 மணிக்கு, செயலாளர் க. செயராமன் தலைமையில் நடந்த கூட்டத்தில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேறின.

### கவண்டம்பட்டி :

தி. மு. கழகச் சார்பில், இந்தி எதிர்ப்புக் கூட்டம் தோழர் குரிமணம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் வை. தங்கவேல், சி. அடைக்கன், இரா. தமிழப்பன், ப. கலைச்செல்வன், ந. மதிவளவன் ஆகியோர் இந்தியை எதிர்த்துப் பேசினர். பிறகு தீர்மானங்கள் பெருத்த கையொலி ஆரவாரத்துடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### பந்தநல்லூர் :

மாலை 5 மணிக்கு, தி.மு. கழகச் சார்பில் தோழர் வைரிமுத்து தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் பொதுக்கூட்டம் தோழர் வீ. ஆர். நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மாரிமுத்து, ச. கல்யாணராமன், கு. இராசமாணிக்கம் முதலியோர் பேசியபின், தோழர் ம. கோ. மணி 'இந்தி எதிர்ப்பு' என்னும் பொருள் பற்றி பேசினார். இந்தி எதிர்ப்புத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஊர்வலத்தில், நெய்க்குன்னம், மதகுசாலை, செருகடம்பூர், முன்னங்குடி, ஆரூர், கயலூர், திருமங்கச்சேரி, சாயனுபுரம், நெய்க்குப்பை முதலிய தி. மு. க. கிளைகள் கலந்துகொண்டன.

### கொடுவாயூர் :

தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. எம். அனீபா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சித்திரகுடி :

மாலை 6 மணிக்கு, ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளைச் சுற்றி, பொதுக்கூட்டம் நடைபெறும் திடலை வந்தடைந்தது; இரவு 7 மணிக்கு, தோழர் பி. பழனிமாணிக்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர்கள் செ. மருதையன், பி. கலியபெருமாள், க. பழநிராசு, பொன். முத்தண்ணன் ஆகியோர் பேசியபின் க. பழநிராசு, தீர்மானங்களைப் படித்து மக்கள் ஆதரவுடன் நிறைவேற்றினர்.

### நல்லமங்கலம் :

தி. மு. கழகத்தினரால் இந்தி எதிர்ப்பு ஊர்வலமும், தோழர் சி. சமுத்திரம் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றன; புளியங்குடி டாக்டர் சேதுராசு, இராசபாளையம் - இராசசேகரன் சி. மலைக்கனி ஆகியோர் பேசினர். இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தியாகராயர் மன்றத் திறப்பு விழாவில் குழப்பம் விளைவிக்க காலிகள் முயற்சி

## கூட்டத்தினர்மீது சோடாபுட்டியை வீசினர்; நால்வருக்குக் காயம்

### கூட்டம் இறுதிவரை நடந்து வெற்றிகரமாக முடிந்தது

சென்னை, அக். 21—

சென்னை—தூயில் 19—10—57-ல் நடந்த சர் பி. தியாகராயர் மன்றத் திறப்பு விழாப் போதக்கூட்டத்தில் மாற்றுக்கட்சியைச் சேர்ந்த காலிகள் கலகம் விளைவிக்க முயன்று தோல்வி கண்டனர். கூட்டம் மிகச் சிறப்புற நடைபெற்று முடிந்தது.

கூட்டத்திலிருந்த மக்கள் மீது, காலிகள் மறைந்திருந்து சோடா புட்டியை வீசியதன் விளைவாக 4 தோழர்களுக்குக் காய மேற்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டம் தோழர் சு. நல்லதம்பி தலைமையில், வாத்தியார் கந்தப் பிள்ளைத் தெருவில் நடைபெற்றது.

தோழர்கள் குப்புசாமி, ஆர். ஜார்ஜ், தீர்த்தகிரி, மாசிலாமணி ஆகியோர் பேசிய பின், தோழர் பி. எம். கருணாகரன் தெலுங்கில் பேசிக்கொண்டிருந்தார்; அவ்வமயம் திடீரென்று கூட்டத்தினர் மீது சோடா புட்டியை காலிகள் சிலர் (இருட்டில் மறைந்திருந்து வீசிவிட்டு) ஓடிவிட்டனர். இதனால் மக்கள் பீதிகொண்டு அங்கு மிங்கும் ஓட ஆரம்பித்தனர்.

உடனே, மேடையிலிருந்த பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களும், மற்றவர்களும் மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டனர். அதற்குள் போலீசாரும் வந்துவிட்டனர். கலைந்த மக்கள் மீண்டும் வந்து அவரவர் இடங்களிலே அமர்ந்து பேச்சைக் கேட்க ஆரம்பித்தனர். தோழர் கருணாகரன் தொடர்ந்து பேசினார். அமைதி நிலவியது. போலீசார் காலிகளைத் தேடினர்; ஆனால் எவரும் பிடிபடவில்லை.

சோடா புட்டி வீச்சின் விளைவாகத் தி. மு. க. செயற்குழு உறுப்பினர் தோழர் இராசேந்திரன், தி. மு. க. உறுப்பினர் தோழர் பாலசுந்தரம், பக்கிரி மற்றும் ஒரு 12 வயது சிறுவன் ஆகிய 4 பேருக்குக் காயமேற்பட்டது. வீசப்பட்ட சோடா புட்டியின் உடைபட்ட கண்ணாடித் துண்டுகளைத் திரண்டிக்கொண்டு வந்து கூட்டத்தினர் பார்வைக்காக மேடையிலிருந்த மேசை மீது வைக்கப்பட்டது.

கூட்டத்தைக் கலைத்து, கலகம் விளைக்கவேண்டுமென்று முன் கூட்டியே திட்டமிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், கூட்டம் நடந்த பகுதியிலுள்ள தெருக்களிலெல்லாம் தெரு விளக்குகள் அன்று எரியவேயில்லை. எரியாததன் மர்மம் புரியவில்லை. இதனால் தெருக்களெல்லாம் இருண்டு கிடந்ததால் ஒளிந்து நின்று குழப்பம் விளைவிக்க காலிகளுக்கு மிகவும் வசதியாக இருந்தது.

தோழர் கருணாகரன் பேசி முடித்த பிறகு தோழர் அன்பழகன் அவர்கள் பேசுகையில், காலிகள் செயலைப் பற்றிக் கூறுகையில் குறிப்பிட்டதாவது:—

★

## 'தாக்கப்படுவதால் நாங்கள் தகர்ந்து விடமாட்டோம்'

### 'வீசப்பட்ட சோடா புட்டிபோல இந்தி ஏகாதிபத்தியம் நொறுங்கப் போகிறது'

*இலட்சியத்தை இலட்சியத்தால் எதிர்க்க முடியாதவர்களின் செயல்பற்றி க. அன்பழகன்*

"இந்தக் கூட்டத்தின்மீது சோடா புட்டியை வீசியவர்கள் வெறும் சோடா புட்டியை வீசியதாக நான் கருதவில்லை; அவர்கள் தங்களுடைய 'அறிவை' இப்படி வீசியெறிந்துவிட்டனர்.

"பொறுக்கிக் கொண்டுவந்து இங்குவைக்கப்பட்டிருக்கும் இந்த உடைந்த சோடா புட்டியின் கண்ணாடித் துண்டுகளைப்போல அவர்களுடைய 'கோட்டை' இடியப் போகிறது; 'இந்தி ஏகாதிபத்தியம்' நொறுங்கப் போகிறது என்பதற்கு அறிகுறிதான் இது!

"இன்று இதை வீசியவர்கள் மட்டுமல்ல— இவர்களுடைய மாபெரும் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களெல்லாம் எங்கள்மீது கல்லையும் சொல்லையும் வீசியவர்கள்தான. எங்களை அழிக்க அவர்களாலேயே முடியவில்லை; பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர்களெல்லாம் தெளிவு பெற்றுக்கின்றனர்.

"இன்றைக்கு முதலமைச்சராகவுள்ள காமராசர்கூட எங்கள் கட்டை விரலை வாங்க வேண்டுமென்று 10 ஆண்டுக்கு முன்பு பேசியவர்தான்; தேனியிலே நம் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் தலையிலே பாறாங்கல்லை போட முயன்றவர்கள்தான் இன்றைய மாபெரும் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள்.

"எனவே, இதற்கெல்லாம் அஞ்சுபவர்களல்ல, நாங்கள்! எங்கள் கொள்கையை எதிர்க்க வேண்டுமென்றால், ஒரு கூட்டம் போட்டு, எங்கள் கொள்கைக்கு மறுப்புரைத்து, கருத்து விளக்கம் தரட்டும்; அதை விடுத்து இப்படிப்பட்ட இழிசெயல்களில் ஈடுபடுவது வெட்கக்கேடாகும்.

"எங்களைத் தாக்க வேண்டுமானால் தனிப்பட்டமுறையில் என்னையோ, என்போன்ற பெயர் தெரிந்தவர்களையோ தாக்கட்டும்; இதை விடுத்து, கூட்டத்திலுள்ள அபலைகளையும் அனாதைகளையும், அப்பாவிகளையும் தாக்குவதுதான் அறிவுடைமையாகுமா? அதிலும், நள்ளிரவிலே வீட்டுக்குள் புகுந்து திருடன் சமுத்துமணியை அறுப்பதுபோல், இருட்டான இந்த நேரத்தில் இப்படிப்பட்ட கயமைச் செயலில் ஈடுபடவேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன்.

"இன்றைக்கு, இங்கு சோடா புட்டி வீசப்பட்டதால் 4 தோழர்கள் காயம்பட்டனர்; இவர்கள் இதுவரை பெயர் தெரியாதவர்களாக இருந்தார்கள். இன்று இவர்கள் 4 பேரும் தி. மு. கழகத்தில் முக்கியமானவர்களாகிவிட்டனர். அடிபட்ட இந்தச் சிறுவனும் எதிர்காலத்தில் தி. மு. கழகத்திற்குப் பயன்படப்போகிறான். இந்த வகையிலே எங்களுக்கு இலாபம்தான்.

"நான் இங்கு பேசவரும்போது சோர்வுற்றிருந்தேன். இப்படி சோடாபுட்டியை வீசியதன் காரணமாக நான் உணர்ச்சியுடன் பேசுவதற்குத் துணை செய்துவிட்டார்கள்.

"இலட்சியத்தை இலட்சியத்தால் எதிர்க்கவேண்டுமென்ற கருத்துப் புரிந்தவர்களாயிருந்தால் அவர்கள் இப்படிப்பட்ட ஈனச் செயலில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். எங்களை எத்தனையோமுறை யார் யாரோவெல்லாம் தாக்கியும் நாங்கள் தகர்ந்துவிடவில்லை. நெல்லிக்குப்பம் மஜீத், உடையார்பாளையம் வேலாயுதம், கே. எஸ். பாண்டியன் போன்றவர்கள் கொல்லப்பட்டார்கள்; இவைகளையெல்லாம் தாங்கிக்கொண்டும் நாங்கள் வளர்ந்துதான் வருகிறோம்— வளருவோம்.

"இன்றைக்கு எங்கள் நிலை என்ன? நாங்கள் இன்று கோட்டைக்குள் புகுந்துவிட்டோம்; அவர்கள் கோட்டையிலிருந்து வெளியேறும் நிலையிலிருக்கின்றனர்."

தோழர் அன்பழகன் அவர்கள் மேலும், இன்றைய அரசியல் நிலை குறித்தும், ஆளும் கட்சியின் போக்குபற்றியும் குறிப்பிட்டுவிட்டு, 'வெள்ளுடை வேந்தர்— நீதியின் நிலைக்களமாம் சர். பி. தியாகராயர் பெயரால் தோன்றியுள்ள இந்த மன்றத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்' எனக் கூறி தியாகராயர் மன்றத்தைத் திறந்துவைத்தார்.

---

## அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.

24 : திருவூர்
25 : கொருக்குப்பேட்டை
26 : சென்னை—மயிலாப்பூர்
27 : நாகப்பட்டினம்
29 : சென்னை—புரசவாக்கம்
30 : கோடம்பாக்கம்

நவ.

1 : கூடுவாஞ்சேரி

---


விற்பனையாகிறது!

## கே. வி. கே. சாமி நினைவு மலர்

ஆசிரியர்: எம். எஸ். சிவசாமி

64 பக்கங்கள் : விலை 12 அணா

முன்பணம் அனுப்புவோருக்கே மலர் அனுப்பப்படும்!

விற்பனையாளர்களுக்கு 25 சத விகிதம் கழிவு தரப்படும்.

விபரங்களுக்கு:—

காரியதரிசி, ஸ்பின்னிங் மில், தொழிலாளர் சங்கம், Regd. 1629, தூத்துக்குடி


---

## உடுமலையில்

துணைப்பொதுச்செயலாளர் **என். வி. நடராசன்** நிகழ்ச்சிகள்

★

**22—10—57 :**

காலை 9-30 மணி : பஞ்சாலைத் தொழிலாளர் சங்க ஆண்டு விழா.

பிற்பகல் 3 மணி : கோவை மாவட்ட தொழிற்சங்கத் தொடர்பாளர்கள் கூட்டம்.

இரவு 7 மணி : பொதுக்கூட்டம்

---

### மூலனூர் முத்தமிழ்க் கலா மன்றத் துவக்கவிழா

23—10—57 மாலை 7 மணிக்கு மூலனூர் வானொலித் திடலில் தோழர் எஸ். எம். இராமசாமி (கவுண்டர்) தலைமையில் மேற்படி விழா நடைபெறும்.

---

### அரியலூர் முத்தமிழ் மன்றத் துவக்கவிழா

22—10—57 மாலை 4 மணிக்கு அரியலூர் பிள்ளையார் கோவில் தெருவில் தோழர் எஸ். கே. ஏ. ஏ நகையா தலைமையில் மேற்படி விழா நடைபெறும்; தோழர்கள் கி. மனோகரன், எம். எஸ். மணி, இரா. நாராயணன் ஆகியோர் கலந்துகொள்வர்.

---


ஸ்ரீ லலித கலா மன்றம், சென்னை-1.

22—10—57 மாலை 7-மணிக்கு

ராஜா அண்ணாமலை மன்றத்தில்

பிரண்ட் ராமசாமி நாடக மன்றம் அளிக்கும்

## 'அன்பின் ஜோதி'

தமிழ் சமூக ஹாஸ்ய நாடகம்

எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

கட்டணம் : ரூ. 10, 5, 3, 2 & 1.

22—10—57 மாலை 6-15 மணிக்கு, சென்னை மேயர் திரு. கே. என். சீனிவாசன் அவர்கள் தலைமையில், திரு. க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ. அவர்கள் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் உருவப் படத்தைத் திறந்து வைப்பார். திரு. டி. வி. நாராயணசாமி அவர்கள் கலந்து கொள்வார்.

டிக்கட்டுகள் காலை 9-30 மணியிலிருந்து ஹாலில் கிடைக்கும்.

நாடகத்திற்குப் பிறகு பஸ் வசதி உண்டு.


## கழகக் கூட்டங்கள்

★

**ஆறுமுகனேரி :**

23—10—57 மாலை 6½ மணிக்கு

தலைவர் : சாம்ராஜ ஸ்டீபன்

பேசுவோர் :

எம். எஸ். சிவசாமி
ஆ. அண்ணாமலை
எப். ஏ. ஜோசப்
டி. சேவந்தி
டி. ஆர். சுப்பிரமணியம்
(மாலை ஊர்வலம் உண்டு)

★

**காவேரி (மில்) நகர் :**

(திருச்சி மாவட்டம்)

23—10—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : துரை மதிவாணன்

பேசுபவர் : கி. மனோகரன்

★

**சென்னை 37-வதுவட்டம்:**

தி. மு. கழக 7-வது ஆண்டு விழா

இராயப்பேட்டை சீனிவாசபுரம் 2-வது தெருவில்

23—10—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : டி. என். கிருட்டினன்

பேசுவோர் :

மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
கண்ணதாசன்

இன்னிசை : இராதாமாணிக்கம்

★

**பாரைப்பட்டி :**

(பழனி வட்டம்)

கருணாநிதி திடலில்

23—10—57 இரவு 7 மணிக்கு

தலைவர் : ஆறுமுகம்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு
பி. என். இராமாநுசம்
எஸ். எம். துரை

இன்னிசை : குப்பமுத்து

★

**அரியலூர் :**

பெட்ரோல் பங்க் எதிரில்

22—10—57 மாலை 6½ மணிக்கு

தலைவர் : மு. மாரிமுத்து

பேசுவோர் :

கி. மனோகரன்
எம். எஸ். மணி
இரா. நாராயணன்

---

### பத்மினி - ராகினிக்கு

தெ. இ. நடிகர் சங்கப் பாராட்டு

22—10—57 காலை 9-30 மணிக்கு சென்னை—தியாகராய நகர் வாணி மகாலில், உலக நாட்டியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற, உலக நாட்டியப் பேரொளி தோழியர் பத்மினி—ராகினி இவர்கட்கு, நிதியமைச்சர் சுப்பிரமணியம் தலைமையில், தென்னிந்திய நடிகர் சங்கச் சார்பில் பாராட்டு அளிக்கப்படும்.

---

### 'இந்து' நேஷனல் அச்சக ஊழியர் சங்க ஆண்டு விழா

22—10—57 மாலை 5 மணிக்கு சென்னை — சிந்தாதிரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில், 'இந்து' பத்திரிகை அலுவலகம் மற்றும் நேஷனல் பிரஸ் ஊழியர்கள் சங்க முதலாண்டு விழா துவங்கும். முதலமைச்சர் திரு. காமராசர் விழாவைத் துவக்கிவைப்பார்; சங்கத் தலைவர் திரு. ஆர். கோபால் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

---

### உடுமலை திராவிட பஞ்சாலை தொழிலாளர் சங்க முதலாண்டு விழா

என். வி. நடராசன் கலந்துகொள்கிறார்

22—10—57 காலை 9 மணியளவில் உடுமலை புதுச்சந்தைப் பேட்டை ஸ்ரீசங்கர் டாக்கீஸில், மேற்படி விழா நடைபெறும். தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் தோழர் என்.வி. நடராசன் அவர்கள் தலைமை வகிப்பார்; தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் விழாவைத் துவக்கிவைப்பார்; தோழர்கள் மு. இராமநாதன், இரா. சுந்தரம், ப. நாராயணன், சாமிநாதன், சந்திரபேந்திரன், எம். ஆர். சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

காலை 8 மணிக்கு சங்க அலுவலகத்திலிருந்து ஊர்வலம் புறப்படும்; இரவு 7 மணிக்கு உடுப்பி திடலில் பொதுக்கூட்டமும், பிற்பகல் 3 மணிக்கு முசாபரி பங்களாவில் மாவட்டத் தொழிற்சங்க தொடர்பாளர்கள் கூட்டமும் நடைபெறும்.

---

### சென்னை 24-வதுவட்ட

தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

22—10—57 காலை 9 மணிக்கு வெங்கடேசபத்தன் தெரு, 37-ம் எண்ணுள்ள இல்லத்தில் மேற்படி வட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; கிளைக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

---

### சென்னை—மயிலையில் அண்ணா படிப்பகத் திறப்புவிழா

22—10—57 மாலை 6 மணிக்கு சென்னை-மயிலை (45-வதுவட்டம்) மசூதி தெருவில் (சித்திரக்குளம் அருகில்), அண்ணா படிப்பகத் திறப்பு விழா நடைபெறும்; தோழர் ச. சிவானந்தம் தலைமை வகிப்பார்; தோழர்கள் டி. கே. சீனிவாசன், சுரதா ஆகியோர் பேசுவர்; டேப்-இராதாமாணிக்கம் இன்னிசை வழங்குவார்.

---

### மரக்காணம் மீனவருக்கு நிவாரணம் தரப்படும்

சென்னை, அக். 19—

மரக்காணம் (தென் ஆற்காடு)—கிள்ளை இடையே கரையோரமாக இருக்கும் மீனவருக்கு உதவுவதற்காக ரூ. 19,000 செலவில் நிவாரணம் அளிக்க சென்னை அரசாங்கம் முன்வந்துள்ளது.

நியாய விலை அரிசிக் கடைகள் திறக்கப்படும்; மேலும், தேவைப்படும் நார் சாமான்கள் பாதி விலைக்குத் தரப்படும்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.